## அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும்

# பயண அட்டை மூலம் மட்டுமே பார்க்கிங் கட்டணம் வசூல்

## ஆக.1 முதல் அமலாகிறது

சென்னை, ஜூலை 25-
அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் ஆகஸ்ட் 1 முதல் பயண அட்டை மூலமே பார்க்கிங் கட்டணம் செலுத்த முடியும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளின் தடையற்ற போக்குவரத்தை எளிதாக்க பயண அட்டை மூலம் வாகனம் நிறுத்தம் கட்டணங்களை செலுத்தும் ஏற்பாட்டை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது நடப்பு ஜூலை மாதத்தில் சோதனை அடிப்படையில் அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக வருகின்ற ஆகஸ்ட் 1ம் தேதி முதல் சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகனம் நிறுத்துமிடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான கட்டணத்தை மெட்ரோ ரயில் பயண அட்டை மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

இதே போன்று மெட்ரோ ரயில் பயண அட்டை இல்லாத பயணிகள் மற்றும் பொதுமக்கள் மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனத்தை நிறுத்த மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் மூலமாகவோ அல்லது டிக்கெட் கவுண்டர்கள் மூலமாகவோ மெட்ரோ ரயில் பயண அட்டையை வாங்கி அதன் மூலம் மட்டுமே கட்டணம் செலுத்தலாம்.

இவ்வாறு கூறியுள்ளது.